සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2016**
**விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி - 2017/2019**

Competitive Examination for Admission to Sri Lanka Schools of Agriculture - 2016
Higher National Diploma in Agricultural Production Technology - 2017/2019

**(01) விவசாயம்**
Agriculture

**ஒரு மணித்தியாலம்**
One hour

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

**விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



✳ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

**உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.**

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **07** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலம்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ **கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 10 | |
| 3 | 11 - 16 | |
| 4 | 17 - 25 | |
| 5 | 26 - 34 | |
| 6 | 35 - 43 | |
| 7 | 44 - 50 | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக் 2 ஐப் பார்க்க.

- **1** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவிற்குமான சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. உலக சுற்றாடல் தினம்
   (1) ஜனவரி 15 ஆந் திகதியன்றாகும். (2) ஏப்ரல் 22 ஆந் திகதியன்றாகும்.
   (3) மே 22 ஆந் திகதியன்றாகும். (4) யூன் 05 ஆந் திகதியன்றாகும். (………)

2. இலங்கை விவசாயத் திணைக்களம் நிறுவப்பட்டது,
   (1) 1912 இலாகும். (2) 1922 இலாகும். (3) 1932 இலாகும். (4) 1942 இலாகும். (………)

3. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் இலங்கையின் விவசாயத்துறை வளர்ச்சி வீதம்,
   (1) 3.2% ஆகும். (2) 4.3% ஆகும். (3) 5.4% ஆகும். (4) 6.5% ஆகும். (………)

4. இலங்கைப் பாராளுமன்றத்தினால் பரிஸ் காலநிலைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது (ratified) 2016 ஆம் ஆண்டு
   (1) ஏப்ரல் 22 ஆந் திகதியன்றாகும். (2) யூன் 05 ஆந் திகதியன்றாகும்.
   (3) செப்ரெம்பர் 9 ஆந் திகதியன்றாகும். (4) செப்ரெம்பர் 22 ஆந் திகதியன்றாகும். (………)

5. பின்வரும் எண்களைக் கருதுக.
   1 , 3 , 9 , 4 , 10 , 13 , 2 , 6
   மேற்படி தரவுத் தொகுதியின் இடை மற்றும் இடையப் பெறுமானங்கள் முறையே,
   (1) 5 , 4 (2) 6 , 5 (3) 8 , 5 (4) 10 , 8 (………)

6. பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
   (1) பிரதான பொருளாதாரத்துறைகள் மூன்றிலும் விவசாயத்துறை இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு அதிக பங்களிப்பை வழங்குகிறது.
   (2) காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் செல்வாக்கினைத் தவிர்ப்பதற்கென பண்டைய அரசர்களினால் குளங்கள் கட்டுவிக்கப்பட்டன.
   (3) பசுமைப் புரட்சி, உள்ளூர் நெல்லினங்களின் மேம்பாட்டுக்கு வழிசமைத்தது.
   (4) தற்போது, இலங்கை சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. (………)

7. வானிலை அவதானிப்பு நிலையத்தில் அனிலமானி மூலமாக அளவிடப்படுவது
   (1) காற்றின் திசை (2) காற்றின் வேகம்
   (3) சாரீரப்பதன் (4) வளிமண்டல வெப்பநிலை (………)

8. இலங்கையின் விவசாயம் தொடர்பான சரியான கூற்று
   (1) நெற்செய்கையின் மூலம் பெறப்படும் உற்பத்தி சிறுபோகத்தை விட பெரும்போகத்தில் அதிகமாகும்
   (2) மொத்த நெல் உற்பத்தி பெரும்போகத்தை விட சிறுபோகத்தில் அதிகமாகும்
   (3) பொதுவாக சிறுபோக நெற்செய்கையின்போது களைகளினால் ஏற்படும் போட்டி, பெரும்போகத்தில் ஏற்படும் போட்டியை விட அதிகமாகும்.
   (4) உரிய காலத்தில் செய்கைபண்ணும்போது, விவசாயிகளினால் சிறுபோகத்தில் நீண்ட வயதுடைய நெல் வர்க்கங்களும் பெரும்போகத்தில் குறுகிய வயதுடைய வர்க்கங்களும் பயன்படுத்தப்படும். (………)

9. நீண்ட பகற்காலத் தாவரத்திற்கு,
   (1) பதிய வளர்ச்சி அதிகரிப்பிற்கு குறும் பகற்காலம் அவசியமாகும்.
   (2) பூக்கள் உருவாக நீண்ட பகற்காலம் அவசியமாகும்.
   (3) பதிய வளர்ச்சி அதிகரிப்பிற்கு குறும் பகற்காலமும், பூக்கள் உருவாக நீண்ட பகற்காலமும் அவசியமாகும்.
   (4) பதிய வளர்ச்சி அதிகரிப்பிற்கு நீண்ட பகற்காலமும் பூக்கள் உருவாக குறும் பகற்காலமும் அவசியமாகும். (………)

10. இலங்கையின் உலர்வலயத்தின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி,
   (1) 300 mm இலும் குறைவாகும். (2) 900 mm இலும் குறைவாகும்.
   (3) 1750 mm இலும் குறைவாகும். (4) 2500 mm இலும் குறைவாகும். (………)

[பக் 3 ஐப் பார்க்க.

● இல **11 , 12** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க கீழே தரப்பட்டுள்ள மண் பக்கப்பார்வை வரிப்படத்தைப் பயன்படுத்துக.




11. சரியான கூற்றைத் தெரிக.
    (1) விவசாய நிலங்களில் O வலயத்தின் தடிப்பு அதிகமாகும்.
    (2) இயற்கை காடுகளில் A வலயத்தின் தடிப்பு அதிகமாகும்.
    (3) A , B ஆகிய வலயங்கள் இரண்டும் ஒன்றாக மேல்மண் எனப்படும்.
    (4) R வலயம் களிமண் துணிக்கைகளினாலானதாகும். (.........)

12. C வலயம் தொடர்பான சரியான கூற்றினைத் தெரிக.
    (1) அது சிதைவடையாத தாய்ப்பாறைகளைக் கொண்டதாகும்.
    (2) அது மண்ணுருவாதலின் மூலமாக B வலயம் உருவாவதில் பங்களிப்புச் செய்யும்.
    (3) அது மண்ணுருவாதலின் மூலமாக A , B ஆகிய வலயங்கள் உருவாவதில் பங்களிப்புச் செய்யும்.
    (4) அது அதிகளவு சேதனப் பதார்த்தங்களைக் கொண்டதாகும். (.........)

13. கரைசலொன்று தொடர்பான பின்வரும் விடயங்களைக் கருதுக.
    A - ஐதரசன் அயன்களின் மூலர்செறிவு
    B - அமிலத்தை நடுநிலைப்படுத்தத்தக்க அளவு ரீதியான கொள்ளளவு
    C - கரைந்துள்ள உப்புகளின் அளவு

    மேற்படி விடயங்களிற்கமைய கரைசலொன்றின் மூலத்தன்மையை விளக்குவது / விளக்குவன,
    (1) A மட்டும். (2) B மட்டும்.
    (3) C மட்டும். (4) A , C ஆகியன மட்டும். (.........)

14. ஆரோக்கியமான நபரொருவரின் குருதியின் pH பெறுமானம்,
    (1) 5.75 - 6.15 க்கு இடைப்பட்டதாகும். (2) 6.55 - 6.95 க்கு இடைப்பட்டதாகும்.
    (3) 7.35 - 7.45 க்கு இடைப்பட்டதாகும். (4) 7.55 - 8.15 க்கு இடைப்பட்டதாகும். (.........)

15. நெல், சோளம், குரக்கன் ஆகிய பயிர்கள் அடங்கும் தாவரக் குடும்பம் யாது?
    (1) பொயேசியே (2) இலகுமினேசியே
    (3) குக்கபீற்றேசியே (4) சொலனேசியே (.........)

16. பின்வருவனவற்றில் வித்து உறங்குநிலையை நன்கு விளக்குவது,
    (1) பொருத்தமான சூழல் நிலைமைகள் கிடைக்கும் வரை குறிப்பிட்ட காலத்துக்கு உயிருள்ள வித்து முளைக்காதிருத்தலாகும்.
    (2) முளைக்கத் தேவையான சூழல் நிலைமைகளின் கீழும் உயிருள்ள வித்து முளைக்காதிருத்தலாகும்.
    (3) தடித்த வித்துறை காரணமாக முதிர்ந்த வித்தொன்று குறிப்பிட்ட காலம் முளைக்காதிருத்தலாகும்.
    (4) பொருத்தமான சூழல் நிலைமைகள் காணப்பட்டபோதும் முதிர்ச்சியடைந்த உயிருள்ள வித்து முளைக்காதிருத்தலாகும். (.........)

/பக் 4 ஐப் பார்க்க.